**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 07.08.2025

SC. 77/2022

அ.சா 7 – சின்னசாமி

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் நாள் **சின்னசாமி** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சின்னசாமி | தந்தை பெயர் | பெருமாள் |
| வயது | 62 | கிராமம் | நாகனப்பள்ளி |
| வட்டம் | பர்கூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை : –**

**( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

நான் நாகனப்பள்ளி பர்கூர் கிருஷ்ணகிரியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 14.08.2015 ம் தேதி நான் காமன் தொட்டியில் உள்ள அரசு மதுபானக் கடையில் உதவியாளராக பணி புரிந்தேன். அன்றைய தினம் நான் பணியை முடித்து விட்டு வீட்டிற்கு கிளம்பி விட்டேன். அன்றைய தினம் இரவு 10.00 மேற்பார்வையாளர் திரு. மணி கடையை அடைத்து பூட்டி சீல் வைக்கும் போது , அன்றை தினம் விற்பனை செய்த தொகை உள்ள பையை அங்கு பணி செய்ஹும் கலைஞர் என்பவரிடம் ஒப்படைத்து விட்டு பில் மற்றும் வருகைப் பதிவேடு வெங்கடராமன் என்பவரிடம் கொடுத்து விட்டு , பூட்டுக்கு சீல் வைத்து கொண்டிருந்தபோது. மேற்பார்வையாளர் மணியை பணப்பையை பறித்து கொண்டு போனவர்கள் அடித்து விட்டார்கள். பணப்பை பிடுங்க வந்தவர்கள் மொத்தம் 5 நபர்கள் வந்ததாகவும் மேற்படி தகவலை விடியற்காலை மேற்பார்வையாளர் மணியும், கலைஞரும் மற்றும் காவல் நிலையத்திலிருந்தும் என்னிடம் தெரிவித்தார்கள். மணியை ராடால் அடித்து விட்டதாகவும் , அதனால் மணிக்கு இடது பக்க தலையிலும் , இடது பக்க கையிலும் காயம் பட்டதாக தெரிவித்தார்கள். மணியை நான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன்.

மருத்துவமனையிலும் பார்த்தேன். மணியை அடித்தவர்கள் 30 வயதில் ஒருவரும் , 35 வயதில் ஒருவரும் இருந்ததாக தெரிவித்தார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சம்வத்தின் போது சம்பவ இடத்தில் இல்லை , சம்பவம் நடந்தது பற்றி என்னிடம் சொன்னார்கள் அதனால் எனக்கு சம்பவம் தெரியும். போலிசார் காவல் நிலையத்தில் வைத்து சொல்லி கொடுத்ததின் பேரில் புகார் தாரருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 07.08.2025

SC. 77/2022

**அ.சா 6 – லஷ்மணன்**

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் நாள் **லஷ்மணன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **லஷ்மணன்** | தந்தை பெயர் | ராமன் @ ராமசாமி |
| வயது | 50 | கிராமம் | அனுமந்தன்கொட்டாய் |
| வட்டம் | கிருஷ்ணகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை : –**

**( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

கடந்த 14.08.2015 ம் தேதி அன்று காலை நான் எனது பணியை முடித்து விட்டு சென்று விட்டேன். அன்று இரவு 11.00 மணியளவில் மேற்பார்வையாளர் எனக்கு போன் செய்து , அடுத்த நாள் ஆகஸ்ட் 15 விடுமுறை என்பதால் நான் கடையை பூட்டி விட்டு ஒரு பூட்டிற்கு சீல் வைத்து விட்டு, அடுத்த பூட்டிற்கு சீல் வைப்பதற்கு முன்பு 3 நபர்கள் வந்து மது பாகனப்பாட்டில் கேட்டார்கள். அதற்கு தான் கடையை பூட்டி விட்டதாகவும் , அதனால் கடையை திறக்க முடியாது என்று கூறியதாகவும், பின்னர் விற்பனை செய்த தொகை வைத்திருந்த பையை அங்கு வேலை செய்யும் கலைஞர் என்பவரிடம் கொடுத்து விட்டு, பில் புக் சிட்டா , வருகை பதிவேடு ஆகியவற்றை வெங்கடராமன் என்பவரிடம் கொடுத்து விட்டு மற்றொரு பூட்டை சீல் வைக்கும் போது அங்கு வந்த 3 நபர்களில் ஒருவர் கலைஞரிடம் இருந்து பணப்பையை பிடிங்கி விட்டதால் அவர் கத்தவே மணி அதைத் தடுத்த போது , அங்கு வந்தவர்கள் மணியை இரும்பு ராடால் இடது பக்க தலையில் அடித்து விட்டதாகவும் கூறி எனக்கு தகவல் சொல்லவே , நான் உடனே கிளம்பி ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

நான் மருத்துவமனை சென்று பார்த்த போது சுப்ரவைஸர் மணிக்கு இடது கை பெருவிரல் மற்றும் இடது தலையில் கட்டு போட்டிருந்தார் பின்னர் மணியை விசாரித்து விட்டு அவரது வேண்டுகோளின் படி நான் சூளகிரி காவல் நிலையம் சென்று தகவலை சொன்னேன். பின்னர் போலிசார் சூளகிரி அரசு மருத்துவமனைக்கு வந்து மணியை விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக என்னையும் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இந்த வழக்கில் சம்பவம் பற்றி அ.சா 1 போன் மூலமாக தகவல் சொன்னதால் எனக்கு தெரியும். போலிசார் காவல் நிலையத்தில் வைத்து சொல்லி கொடுத்ததன் பேரில் நான் அ.சா 1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த கடையின் ஊழியர் ஆவேன்., அ.சா 1 என்னுடன் பணி செய்பவர் ஆவார் அதனால் நான் பொய் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா 1 என்னுடன் வேலை செய்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur